# மாலைக்கதிர்
Maalaikkathir

சாயல் - 03 வள்ளுவர் ஆண்டு 2055 ஆனி 06 வெள்ளிக்கிழமை 20.06.2025 கதிர் 231










## "செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரி வேண்டும்!"

### யாழில் இன்று கவனயீர்ப்புப் போராட்டம்

யாழ்ப்பாணம், ஜூன் 20

செம்மணி - சித்துப்பாத்தி மனிதப் புதைகுழி விவகாரத்துக்கு நீதி கோரி கவனயீர்ப்புப் போராட்டம் இன்று யாழ்ப்பாணத்தில் நடைபெற்றது.

செம்மணி - சித்துப்பாத்தி இந்து மயானப்பகுதியில் மேற்கொள்ளப்பட்டு வந்த மனிதப் புதைகுழி தொடர்பான பரீட்சாத்த அகழ்வுப் பணிகளில் மொத்தமாக 19 முழுமையான மனித என்புத்தொகுதிகள் மீட்கப்பட்டுள்ளன.

இவை தொடர்பில்

உரிய விசாரணைகளை முன்னெடுக்க வேண்டும் எனப்பலரும் வலியுறுத்தி வந்த நிலையிலேயே வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் இன்று காலை 10.30 மணியளவில் யாழ்ப்பாணம் - நல்லூர் வளைவுக்கு அருகில் செம்மணி மனிதப் புதைகுழிக்கு நீதி கோரிப் போராட்டம் இடம்பெற்றது.

இந்தப் போராட்டத்தில் வடக்கு - கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் பிரதிநிதிகள், அரசியல் பிரமுகர்கள், பொதுமக்கள் உட்படப் பலர் கலந்துகொண்டு நீதி கோரிக் கோஷங்களை எழுப்பினர்.

போராட்டம் இடம்பெற்ற 7

### யாழ்ப்பாணம் மாவட்டத்தின்

## நிரந்தர அரச அதிபராக நியமிக்கப்பட்ட பிரதீபன்



கொழும்பு, ஜூன் 20

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் நிரந்தர அரச அதிபராக மருதலிங்கம் பிரதீபன் அமைச்சரவை அனுமதியின் பிரகாரம் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனக் கடிதம் இன்று வெள்ளிக்கிழமை அமைச்சரவை செயலாளர் டபிள்யூ.எம்.டி.ஜே. பெர்னாண்டோவினால் அமைச்சரவை அலுவலகத்தில் வைத்து வழங்கி வைக்கப்பட்டது.

மருதலிங்கம் பிரதீபன் கடந்த 2024 மார்ச் 9 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பதில் அரச அதிபராகக் கடமையாற்றி வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# தமிழருக்கு தீர்வு உறுதி

### பிரதமர் ஹரிணி திட்டவட்டம்



கொழும்பு, ஜூன் 20

"தமிழ் மக்களின் அரசியல் பிரச்சினைக்குத் தீர்வு வழங்கப்படும். புதிய அரசமைப்பின் ஊடாக அந்தத் தீர்வை வழங்குவோம்." - என்று பிரதமர் ஹரிணி அமரசூரிய தெரிவித்தார்.

அரசியல் தீர்வு விடயம் கருத்துரைக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:- 7

## வேலணை பிரதேச சபை தமிழரசுக் கட்சி வசம்!

### தவிசாளராக அசோக்குமார் ஏகமனதாகத் தெரிவு



யாழ்ப்பாணம், ஜூன் 20

வேலணைபிரதேசசபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சிவலிங்கம் அசோக்குமார் ஏகமனதாகத் தெரிவானார். 7



## தமிழ்க் காங்கிரஸ் வசமானது ஊர்காவற்றுறை பிரதேச சபை


### தவிசாளரானார் அன்னலிங்கம் அன்னராசா

யாழ்ப்பாணம், ஜூன் 20

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளராக அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசா திருவுளச்சீட்டு முறை மூலம் தெரிவாகியுள்ளார்.

ஊர்காவற்றுறை பிரதேச சபையின் தவிசாளர் 7

## வலி. தென்மேற்கு பிரதேச சபையையும் கைப்பற்றியது இலங்கைத் தமிழரசுக் கட்சி





யாழ்ப்பாணம், ஜூன் 20

யாழ். வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கந்தையா யசீதன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று பிற்பகல் 7

# டில்வின் சில்வா உள்ளிட்ட குழுவினர் நாடு திரும்பினர்



கொழும்பு, ஜூன் 20


சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அழைப்பின் பேரில், மக்கள் விடுதலை முன்னணியின் செயலாளர் டில்வின் சில்வா உட்பட இலங்கை பிரதிநிதிகள் 29 பேர், நாட்டின் முன்னேற்றம் மற்றும் வளர்ச்சியைக் காண 10 நாள் பயணத்தை முடித்துக்கொண்டு கட்டுநாயக்க விமான நிலையத்தை வியாழக்கிழமை (19) இரவு வந்தடைந்தனர்.

இந்த விஜயம் சீன அரசாங்கத்தால் நிதியுதவி செய்யப்பட்டதாகவும், நாட்டின் பல மாநிலங்களுக்குச் சென்று வருவதாகவும், அந்த நாட்டின் பல தலைவர்களைச் சந்தித்ததாகவும், அவர்கள் நாட்டின் வளர்ச்சிக்கு தொடர்ந்து பங்களிப்பதாக உறுதியளித்ததாகவும் டில்வின் சில்வா கட்டுநாயக்க விமான நிலையத்தில் தெரிவித்தார்.

இந்த விஜயத்தின் போது, கிராமப்புறங்கள் எவ்வாறு வளர்ச்சியடைந்துள்ளன, வறுமை எவ்வாறு ஒழிக்கப்பட்டுள்ளது மற்றும் தொழில்நுட்பம் இதற்கு எவ்வாறு பயன்படுத்தப்பட்டுள்ளது என்பதை சீன கம்யூனிஸ்ட் கட்சியின் அதிகாரிகள் தனக்குக் காட்டியதாகவும் டில்வின் சில்வா கூறினார்.

அதன்படி, நாட்டில் வறுமையை ஒழிக்கவும், கிராமப்புறங்களை மேம்படுத்தவும்தொழில்நுட்பத்தைப் பயன்படுத்த தேவையான திட்டங்களைத் தயாரித்து எதிர்காலத்தில் நடவடிக்கை எடுப்பேன் என்று அவர் மேலும் கூறினார். (ஐ)

## முகப்பு விளக்குகளை ஒளிரவிடவும்



கொழும்பு, ஜூன் 20

மத்திய மலைநாட்டில் பல்வேறு பிரதேசங்களிலும் அடர்ந்த மூடுபனி பரவியுள்ளது. இதன் காரணமாக போக்குவரத்து பாதிக்கப்பட்டுள்ளது.

ஹட்டன்-நுவரெலியா, ஹட்டன்-கொழும்பு மற்றும் துணைச் வீதிகளில் இந்த அடர்ந்த மூடுபனி நிலை நிலவுகிறது.

இந்த வீதிகளில் வாகனம் ஓட்டும்போது, வாகன முகப்பு விளக்குகளை ஒளிரவிட்டு வாகனத்தை மெதுவாகவும் கவனமாகவும் செலுத்துமாறு ஹட்டன் போக்குவரத்து பொலிஸார் சாரதிகளைக் கேட்டுக் கொண்டுள்ளனர். (ஐ)

## இலங்கையர்கள் எந்த நேரத்திலும் இலங்கைக்கு வரலாம்



கொழும்பு, ஜூன் 20

இஸ்ரேலில் பணிபுரியும் இலங்கையர்கள் எந்த நேரத்திலும் இலங்கைக்கு வரும் வகையிலான வசதிகளை செய்ய இலங்கை தயாராக இருப்பதாக இஸ்ரேலுக்கான இலங்கைத் தூதுவர் நிமல் பண்டார தெரிவித்துள்ளார்.

நேற்று (19) ஒரு நாளில் மட்டும் நான்கு இலங்கையர்கள் இலங்கைக்குப் வரும் வசதி செய்யப்பட்டதாகவும், இஸ்ரேலில் விடுமுறை நாட்களான இன்று (20) மற்றும் நாளை (21) தூதரகம் திறந்திருக்கும் என்றும் அவர் தெரிவித்தார்.

விசா காலாவதியாகிவிட்டாலும், அவர்கள்நாட்டிற்குள்நுழைய அனுமதிக்க டிக்கெட்டுகளை வழங்குமாறு கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. எனவே, அவர்கள் திரும்பி வருவதற்கு வாய்ப்பு உள்ளது என்றார (ஐ)




# தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையை நிறுத்துவது தொடர்பான இறுதி முடிவு



கொழும்பு, ஜூன் 20

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சை உடனடியாக இடைநிறுத்தப்படாது என்று கல்வி மற்றும் உயர்கல்வி பிரதி அமைச்சர் மதுர செனவிரத்ன தெரிவித்துள்ளார்.

நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர எழுப்பிய கேள்விக்கு பதிலளிக்கும் விதமாக, இன்று (20) நாடாளுமன்றத்தில் உரையாற்றிய செனவிரத்ன, 2029 ஆம் ஆண்டுக்கான புலமைப்பரிசில் பரீட்சையை எந்த மாற்றமும் இல்லாமல் நடத்த அரசாங்கம் முடிவு செய்துள்ளதாகக் கூறியுள்ளார்.

உடன் வெளியேறுங்கள்! இஸ்ரேலின் முக்கிய ஊடகத்தை தாக்க தயாராகியுள்ள ஈரான்


உடன் வெளியேறுங்கள்! இஸ்ரேலின் முக்கிய ஊடகத்தை தாக்க தயாராகியுள்ள ஈரான்

தரம் 5 புலமைப்பரிசில் பரீட்சையின் எதிர்காலத்தை மதிப்பிடுவதற்கும், அது 2029 க்குப் பிறகும் தொடர வேண்டுமா என்பதைத் தீர்மானிப்பதற்கும் 2028 ஆம் ஆண்டில் ஒரு குழு நியமிக்கப்படும் என்றும் குறிப்பிட்டுள்ளார்.

பரீட்சையுடன் தொடர்புடைய தேவையற்ற அழுத்தத்தைக் குறைப்பதற்கான ஒரு திட்டத்தை பரீட்சைத் திணைக்களம் தற்போது மேற்கொண்டு வருவதாக பிரதி அமைச்சர் தெரிவித்துள்ளார்.

மேலும், பாடசாலைகளுக்கு இடையிலான ஏற்றத்தாழ்வுகளை முறையாகக் குறைப்பதற்கும், புலமைப்பரிசில் பரீட்சையின் போட்டித் தன்மையால் மாணவர்கள் மீதான சுமையைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அவர் வலியுறுத்தியுள்ளார். (ஐ)

# இணைய உலகினை கதிகலங்கச் செய்யும் கடவுச் சொற்களை மாற்றுமாறு அறிவுறுத்தல்



கொழும்பு, ஜூன் 20

இணைய உலகினை கதிலங்கச் செய்யக்கூடிய அதிர்ச்சி தகவல் ஒன்று வெளியிடப்பட்டுள்ளது.

இணைய உலகின் மிகப்பெரிய தகவல் திருட்டு சம்பவம் ஒன்று பதிவாகியுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதுவரை பதிவான தகவல் திருட்டுகளில் மிகப்பெரிய அளவிலான தகவல் திருட்டு சம்பவம் இது என தெரிவிக்கப்படுகிறது.

இந்த சம்பவம் இணைய உலகத்தை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது. சுமார் 16 பில்லியன் கடவுச்சொற்கள் உள்ளிட்ட முக்கிய தரவுகள் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

சுமார் 30 பாரிய அளவிலான தரவு தளங்களில் இருந்து இந்த தகவல்கள் கசிந்து உள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. முன்னணி சமூக ஊடக வலைத்தளங்கள் மற்றும் இணையதளங்களின் தகவல்கள் இவ்வாறு தளவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

பயனர் விவரங்கள், கடவுச்சொற்கள் உள்ளிட்ட மிக முக்கியமான தகவல்கள் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

உலகில் சுமார் 5.5 பில்லியன் மக்கள் இணையத்தை பயன்படுத்துவதாகவும் பெரும் எண்ணிக்கையிலான பயனர்களின் தகவல்கள் களவாடப்பட்டு இருக்கலாம் எனவும் அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.

பயனர்கள் உடனடியாக தங்களது கடவுச்சொற்களை மாற்றி அமைக்குமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

அவ்வாறு செய்யத் தவறினால் சைபர் குற்றவாளிகள் இந்த கடவுச்சொற்களை பயன்படுத்தி குற்ற செயல்களில் ஈடுபட கூடும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இவ்வாறு களவாடப்பட்ட தகவல்களில் தனிப்பட்ட நபர்களின் தரவுகள் மட்டுமின்றி அரசாங்கங்களின் நாடுகளில் அரசாங்கங்களின் தகவல்களும் களவாடப்பட்டு இருக்கலாம் என அச்சம் வெளியிடப்பட்டுள்ளது.


அமெரிக்கா, பிரித்தானியா, அவுஸ்ரேலியா, கனடா, சீனா, இந்தியா இஸ்ரேல், சவுதி அரேபியா உள்ளிட்ட 29 நாடுகளின் அரசாங்க இணையதள தகவல்களும் களவாடப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

களவாடப்பட்ட தகவல்களைக்கொண்டு நேரடியாக பயனர்களின் கணக்குகளுக்குள் பிரவேசிக்க முடியும் என எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

இன்ஸ்டாகிராம், மைக்ரோசாப்ட், நெட்ப்ளிக்ஸ், பேபால், ரோபோலாக்ஸ் டிஸ்கோர்ட் உள்ளிட்ட முக்கிய இணையதளங்களின்பல்வேறு முக்கியமான தகவல்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் இவை சுமார் 47 கிகாபைட்ஸ் அளவிலான தகவல்கள் களவாடப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

பயனர்கள் உடனடியாக தங்களது கடவுச்சொற்களை மாற்றி அமைப்பதன் மூலம் சைபர் தாக்குதல்களில் இருந்து தப்பித்துக் கொள்ள முடியும் என சைபர் பாதுகாப்பு நிபுணர்கள் ஆலோசனை வழங்கியுள்ளனர்.

எவ்வாறெனினும் இந்த தரவு திருட்டுச் சம்பவம் தொடர்பில் முன்னணி நிறுவனங்கள் தங்களது நிலைப்பாட்டை இதுவரையில் அதிகாரபூர்வமாக வெளியிடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)



# துன்புறுத்தலினாலேயே பல்கலைக்கழக மாணவன் உயிரிழப்பு

கொழும்பு, ஜூன் 20

சப்ரகமுவ பல்கலைக்கழக தொழில்நுட்ப பீட மாணவனின் மரணம் தொடர்பான தகவலை குற்றப் புலனாய்வு பிரிவு வெளியிட்டுள்ளது.

குறித்த மாணவன் துன்புறுத்தல் காரணமாகவே வீட்டில் உயிரை மாய்த்துக் கொண்டதாக குற்றப் புலனாய்வு பிரிவு நடத்திய விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

மன அழுத்தம் காரணமாக மாணவன் உயிரிழக்கவில்லை என குற்றப் புலனாய்வு பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

பல்கலைக்கழகத்திற்குள் நடைபெறும் துன்புறுத்தல் தொடர்பான விடயங்களை வெளியே வெளிப்படுத்த பல்கலைக்கழக நிர்வாகம் அனுமதிக்கவில்லை என்பதும் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

சமீபத்தில் வீட்டில் உயிரை மாய்த்துக் கொண்ட சரித் தில்ஷான் என்ற மாணவன், சம்பவத்திற்கு முந்தைய இரவு முழுவதும் துன்புறுத்தப்பட்டதாக குற்றப் புலனாய்வு பிரிவு தெரிவித்துள்ளது.

துன்புறுத்தல் சம்பவம் தொடர்பாக இலங்கை வழக்கறிஞர்கள் சங்கம் உயர் நீதிமன்றத்தில் தாக்கல் செய்த மனுவை நேற்று முன்தினம் விசாரிக்கவும் நீதிமன்றம் முடிவு செய்தது.

சம்பவம் தொடர்பாக கைது செய்யப்பட்ட பல்கலைக்கழக மாணவர்கள் குழுவை மேலும் விளக்கமறியலில் வைக்க பலாங்கொட நீதிமன்றம் உத்தரவிட்டது. (ஐ)

# கதிர்காமம் வரும் பக்தர்களுக்காக குமண நுழைவாயில் திறப்பு!


*கொழும்பு, ஜூன் 20*

*கதிர்காமக் கந்தனை வழிபட பாதயாத்திரையில் வரும் வடக்கு மற்றும் கிழக்கு பக்தர்களின் நலன் கருதி இன்று யால வனப்பூங்காவின் கிழக்கு நுழைவாயிலான குமண நுழைவாயில் திறக்கப்படவுள்ளது.*

*இன்று தொடக்கம் எதிர்வரும் இரண்டு வாரங்களுக்கு பக்தர்களின் நலன் கருதி இந்தப் பாதை திறக்கப்படும் என்று யால வனப்பூங்கா நிர்வாகம் அறிவித்துள்ளது.*

*கதிர்காமக் கந்தனை வழிபட வடக்கு மற்றும் கிழக்கு பக்தர்கள் வருகை தரும் பாதயாத்திரையே இந்நாட்டின் மிக நீண்ட மற்றும் நீண்டகால வரலாற்றைக் கொண்ட பாதயாத்திரையாகும்.*

*கதிர்காமக் கந்தனுக்காக தாங்கள் மேற்கொண்ட நேர்த்திக்கடன்களை நிறைவேற்றும் நோக்கில் நூற்றுக்கணக்கான கிலோமீட்டர்களை இந்த யாத்திரிகர்கள் பாதயாத்திரையாக கடந்து கதிர்காமத்தை வந்தடைகின்றனர்.(ஐ)*



# முதல்வர் மருந்தகம் இல்ல... ‘முதல்வர் மாவகம்’ அண்ணாமலை விமர்சனம்



முதல்வர் மருந்தகங்களில் மாவு விற்கப்படும் நிலையில், இதற்குப் பேசாமல், முதல்வர் மாவகம் என்று பெயர் வைத்திருக்கலாம் என்று பா.ஜ., மாநில முன்னாள் தலைவர் அண்ணாமலை விமர்சித துள்ளார்.

அவரது அறிக்கை மக்கள் நலனுக்காகத் திட்டங்களைச் செயல்படுத்தாமல், ஒரு நாள் விளம்பரத்துக்காகச் செயல்படுத்தினால் என்ன ஆகும் என்பதற்கு மற்றுமொரு உதாரணம், தி.மு.க., அரசால் பலத்த ஆரவாரத்துடன் ஆரம்பிக்கப்பட்ட, முதல்வர் மருந்தகம்.

கடந்த பிப்ரவரி மாதம் தொடங்கப்பட்ட இந்த திட்டம், தொடக்கம் முதலே போதிய மருந்துகள் அரசால் வழங்கப்படவில்லை என்ற புகாருக்கு உள்ளானது. பலமுறை கோரிக்கை வைத்தும், தி.மு.க., அரசு நடவடிக்கை எடுக்காததால், வாடகை, மின்சாரக் கட்டணம் உள்ளிட்ட அடிப்படைச் செலவுகளைச் சமாளிக்க, முதல்வர் மருந்தகங்களில் தற்போது மாவு விற்பனை செய்யும் நிலைக்குத் தள்ளப்பட்டிருக்கின்றனர் மருந்தக உரிமையாளர்கள்.

பொதுமக்களும், முதல்வர் மருந்தகங்களில் மருந்துதான் கிடைக்கவில்லை, மாவாவது கிடைக்கிறதே என்று வாங்கிச் செல்கின்றனர்.

இதற்குப் பேசாமல், முதல்வர் மாவகம் என்று பெயர் வைத்திருக்கலாம். நான்காண்டு காலமாக, அரைத்த மாவையே அரைத்துக் கொண்டிருக்கும் தி.மு.க., ஆட்சிக்கு, இந்தப் பெயர் மிகப் பொருத்தமாக இருந்திருக்கும், இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# 8 ஏர் இந்தியா விமானங்கள் ரத்து இண்டிகோ விமானம் தரையிறக்கம்!




பராமரிப்பு பணி காரணமாக 8 ஏர் இந்தியா விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன. சென்னையில் இருந்து 70 பயணிகளுடன் மதுரைக்கு இண்டிகோ விமானம் புறப்பட்டது. தொழில்நுட்ப கோளாறு காரணமாக, சென்னையில் விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது.

ஆமதாபாத்தில் நடந்த ஏர் இந்தியா விமான விபத்தில், பயணிகள் 241 பேர் உயிரிழந்ததைத் தொடர்ந்து, டாடா குழுமத்திற்குச் சொந்தமான விமான நிறுவனத்தில் தொடர் மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளன.

இந்த விபத்தில் விமானத்தில் இருந்த ஒரே நபர் மட்டுமே அதிசயமாக உயிர் தப்பினார். இந்த சூழலில், பராமரிப்பு பணி காரணமாக 8 ஏர் இந்தியா விமானங்கள் ரத்து செய்யப்பட்டு உள்ளன. 4 சர்வதேச மற்றும் 4 உள்நாட்டு விமானங்கள் ரத்து செய்யப்பட்டுள்ளது.

இது குறித்து ஏர் இந்தியா விமான நிறுவனம் வெளியிட்டுள்ள அறிக்கை:

1. துபாயிலிருந்து சென்னைக்கு செல்லும் விமானம் **(AI906)**

2. டில்லியிலிருந்து மெல்போர்னுக்கு செல்லும் விமானம் **( AI308)**

3. மெல்போர்னிலிருந்து டில்லிக்கு செல்லும் விமானம் **(AI309)**

4. துபாயிலிருந்து ஐதராபாத்திற்கு செல்லும் விமானம் **(AI2204)**

5. புனேவில் இருந்து டில்லிக்கு செல்லும் விமானம் **(AI874)**

6. ஆமதாபாத்தில் இருந்து டில்லிக்கு செல்லும் விமானம் **(AI456)**

7. ஐதராபாத்தில் இருந்து மும்பைக்கு செல்லும் விமானம் **(AI2872)**

8. சென்னையில் இருந்து மும்பைக்கு செல்லும் விமானம் **(AI571)** ஆகிய 8 விமானங்கள் பராமரிப்பு பணி காரணமாக ரத்து செய்யப்பட்டுள்ளன. பயணிகளுக்கு ஏற்பட்ட சிரமத்திற்கு நாங்கள் வருந்துகிறோம். எங்களது ஊழியர்கள் மாற்று ஏற்பாடுகளைச் செய்து வருகின்றனர். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டு உள்ளது.

சென்னையில் இருந்து 70 பயணிகளுடன் மதுரைக்கு புறப்பட்ட இண்டிகோ விமானம் அவசரமாக தரையிறக்கப்பட்டது. நடுவானில் விமானம் பறந்து கொண்டிருந்த போது இயந்திரக் கோளாறை விமானி கண்டுபிடித்தார்.

தகுந்த நேரத்தில் கண்டுபிடித்து விமானி எடுத்த துரித நடவடிக்கையால், விமானம் விபத்தில் இருந்து தப்பியது. இதனால் விமானத்தில் பயணித்த அனைத்து பயணிகளும் பத்திரமாக மீட்கப்பட்டனர். (ஐ)



# சீமான் மீது வழக்கு பதியாவிட்டால் போராட்டம்: கிருஷ்ணசாமி மிரட்டல்

புதிய தமிழகம் கட்சியின் நிறுவனர் கிருஷ்ணசாமி சென்னையில் அளித்த பேட்டி:

கடந்த 15ம் தேதி, தூத்துக்குடி மாவட்டம், பெரியதாழையில், கள் இறக்கிய சீமான் மற்றும் அதில் பங்கேற்றவர்கள் மீது போலீசார் உடனே வழக்குப்பதிவு செய்ய வேண்டும்.

சீமானை கைது செய்ய வேண்டும். இல்லையெனில், இது சமூகத்தில் போக்கிரித்தனத்தையும், பொல்லாத விஷயங்களையும் ஊக்கப்படுத்துவதாக அமைந்து விடும்.

தமிழ்த்தேசியம் பேசிவிட்டு, கள் தேசியத்தையும், சாராய தேசியத்தையும் உருவாக்க சீமான் முயல்கிறார்.

இனி தமிழகத்தில் எந்த இடத்திலாவது சீமான் கள் இறக்கினால், கள் பானைகளை உடைக்க, 100 அரிவாளோடு சிலர் தயாராக இருக்கின்றனர்.

கள் இறக்குவோருக்கு பாதுகாப்பு கொடுக்க, அரிவாளை ஊருக்குள் தூக்கினால், கள் பானைகளை உடைக்க, 100 அரிவாளை ஊருக்குள் தூக்கினால் நிலை என்னவாகும்.

சீமான் தன்னை திருத்திக்கொள்ள வேண்டும் அல்லது திருத்தப்படுவார். கள் இறக்கிய சீமான் மற்றும் அவருடன் பங்கேற்றவர்கள் மீது, போலீசார் வழக்குப்பதிவு செய்ய வேண்டும் இல்லையென்றால், நாங்கள் அடுத்தகட்டம் நோக்கி செல்வோம். போராட்ட அறிவிப்பு வெளியிடப்படும். சட்டப்பூர்வ நடவடிக்கைகளும் மேற்கொள்ளப்படும். (ஐ)

# தாக்குதலால் அச்சத்தில் உறைந்து நின்றோம் ஈரானில் மீட்கப்பட்ட மாணவர்கள் ‘திக் திக்’

“வானில் தொடர்ந்து ஏவுகணைகள் வீசப்பட்டதுடன், அருகே குண்டு சத்தங்களும் இடைவிடாது கேட்டன் நாங்கள் அச்சத்தில் உறைந்து நின்றோம்” என, ஈரானில் இருந்து ‘ஆப்பரேஷன் சிந்து’ வாயிலாக நேற்று தாயகம் திரும்பிய மாணவர்கள் தெரிவித்தனர்.

ஹமாஸ் பயங்கரவாத அமைப்பை ஆதரிக்கும் ஈரான் மீது இஸ்ரேல் தாக்குதல் நடத்தி வருகிறது. ஈரானும் பதில் தாக்குதலில் ஈடுபட்டு வருகிறது.

இரு தரப்பிற்கும் இடையே மோதல் போக்கு தீவிரமடைந்துள்ள நிலையில், போர் பதற்றம் அதிகரித்துள்ளது. இச்சூழலில், ஈரானில் தங்கி பயிலும் இந்திய மாணவர்களை மீட்க, ‘ஆப்பரேஷன் சிந்து’ நடவடிக்கையை மத்திய அரசு எடுத்துள்ளது.

இதற்கான பணிகளை ஈரான், அர்மேனியா மற்றும் துர்க்மெனிஸ்தான் நாடுகளில் உள்ள இந்திய தூதரகங்கள் மேற்கொண்டுள்ளன.

முதற்கட்டமாக, ஈரானில் இருந்து, 110 இந்திய மாணவர்கள், பஸ்கள் வாயிலாக அண்டை நாடான அர்மேனியாவின் தலைநகர் யெரெவானுக்கு அழைத்து வரப்பட்டனர். பின், அங்கிருந்து சிறப்பு விமானம் வாயிலாக நேற்று முன்தினம் டில்லி அனுப்பி வைக்கப்பட்டனர்.

அந்த விமானம் நேற்று காலை டில்லி வந்த நிலையில், வெளியுறவு இணையமைச்சர் கீர்த்தி வர்தன் சிங், நேரில் சென்று மாணவர்களை வரவேற்றார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் அவர் கூறுகையில், ‘ஆப்பரேஷன் சிந்து வாயிலாக, ஈரானில் வசிக்கும் இந்தியர்களை மீட்க உதவி வரும் அர்மேனியா, துர்க்மெனிஸ்தான் அரசுகளுக்கு நன்றி.

‘இந்தியர்கள் பலர், ஈரானில் சிக்கி தவிப்பதாக தகவல் வெளியாகி உள்ளன. எனவே, அவர்களை மீட்க அதன் அண்டை நாடான துர்க்மெனிஸ்தானிற்கு மற்றொரு விமானம் இன்று அனுப்பப்பட்டுஉள்ளது’ என்றார்.

ஆப்பரேஷன் சிந்து வாயிலாக மீட்கப்பட்ட மாணவர்களில் ஒருவரான மிர் காலிப் என்பவர் செய்தியாளர்களிடம் கூறுகையில், “நாங்கள் ஏவுகணை தாக்குதல்களை நேரடியாக பார்த்தோம் இடைவிடாது குண்டுசத்தங்களை கேட்டோம். “தாக்குதல்களால், நாங்கள் தங்கியிருந்த கட்டடம் குலுங்கியது. நாங்கள் அச்சத்தில் உறைந்து நின்றோம். இதுபோன்ற சூழலை, வேறு எந்தவொரு மாணவரும் சந்திக்கக்கூடாது.

‘‘இன்னும், பல மாணவர்கள் அங்கு சிக்கித் தவிக்கின்றனர். பாதுகாப்பான இடங்களுக்கு அவர்களை அப்புறப்படுத்தி வருகின்றனர்.

“விரைவில், சிறப்பு விமானங்கள் வாயிலாக மத்திய அரசு அழைத்து வரும் என்ற நம்பிக்கை உள்ளது,” என்றார். மீட்கப்பட்ட மற்றொரு மாணவர்களில் டில்லியைச் சேர்ந்த அலி அக்பர் கூறுகையில், “நாங்கள் பஸ்சில் வந்தபோது வானில் இருந்து ஏவுகணைகள் வீசப்பட்டதை கண்டோம் இத்தாக்குதலால், ஈரான் தலைநகர் டெஹ்ரான் அழிந்து வருகிறது. செய்திகளில் வரும் படங்கள், வீடியோக்கள் அனைத்தும் உண்மையானவை் அங்குள்ள நிலைமை மிகவும் மோசமாக உள்ளன,” என்றார்.

டில்லி வந்த 110 இந்திய மாணவர்களில், 90 பேர் ஜம்மு - காஷ்மீரைச் சேர்ந்தவர்கள். ஈரானின் உர்மியாவில் உள்ள மருத்துவ அறிவியல் பல்கலையில் பயின்று வந்த இவர்கள் அனைவரையும் டில்லியில் இருந்து ஜம்மு - காஷ்மீருக்கு சிறப்பு பஸ்கள் வாயிலாக அனுப்பி வைக்கப்பட்டனர். இதற்கிடையே அந்த பஸ்கள், மிகவும் மோசமான நிலையில் இருந்ததாக மாணவர்கள் குற்றஞ்சாட்டினர். இது, ஜம்மு - காஷ்மீர் முதல்வர் ஒமர் அப்துல்லாவின் கவனத்திற்கு சென்றது. உடனே, சொகுசு பஸ் வாயிலாக அம்மாணவர்களை அழைத்து வர ஏற்பாடு செய்தார். (ஐ)



# மாற்றங்களை வரவேற்போம்!



‘என்னுடைய மனைவி பேசுவதை மட்டும் கொஞ்சம் குறைத்துக்கொண்டால், எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? பேசுவதை மட்டும் குறைத்தால் போதும், உலகிலேயே நல்ல மனைவி என் மனைவிதான்.’

‘என்னுடைய கணவர் கொஞ்சம் சிரித்துப் பேசினால் எவ்வளவு நன்றாக இருக்கும்? “கொஞ்சம் சிரிச்சா என்ன?’

‘எல்லா வசதியும் செய்து தானே கொடுத்திருக்கிறேன், ஆனாலும் படிக்கிறான் இல்லை. ‘

பொஸ் கொஞ்சம் கோபப்படாமல், அமைதியாகப் பேசினால், அலுவலகம் பதட்டமே இல்லாமல் எவ்வளவு அழகா மாறிவிடும்?

இப்படி நம் ஒவ்வொருவருக்கும் அடுத்தவர்கள் மாறினால் நன்றாக இருக்குமே என நிறைய எதிர்பார்ப்புகள் இருந்துகொண்டேதான் இருக்கின்றன. குடும்பத்தில் தொடங்கி நட்பு வட்டாரம் வரையிலும் சமூகத்திடமும் நமக்கு எதிர்பார்ப்புகள் இருக்கின்றன. குறிப்பாக இளைய தலைமுறையினரிடம் நம் எதிர்பார்ப்புகள் அதிகம்.

நாம் மாற வேண்டும் எனத் தோன்றுவது இல்லை. அடுத்தவரை மாற்ற வேண்டும், அடுத்தவர் மாற வேண்டும் என்றே தோன்றுகிறது.

மாற்றம் ஒன்றே மாறாதது எனச் சொல்லிக்கொள்வது எளிதாக இருக்கிறது. ஆனால், அதை நமக்குள் செயல்படுத்துவதுதான் கஷ்டமாக இருக்கிறது.

இளைய தலைமுறையைப் பாருங்கள். எவ்வளவு பெரிய மாற்றம் அவர்களிடத்தில்! ஆனால், அவர்களிடமுள்ள மாற்றத்தை நம்மால் ஏற்றுக்கொள்ள முடிகிறதா என்றால் இல்லை.

நாம் மாறவும் பிடிக்கவில்லை பிறர் மாறினாலும் பிடிக்கவில்லை. அதனால்தான், இந்த இளைய தலைமுறையைப் பார்த்து அவ்வளவு குறைகள். அவர்களின் ரசனை தொடங்கி, பழக்கவழக்கங்கள் வரை நம்மால் ஏற்றுக்கொள்ள முடியவில்லை.

நிறைய நேரம் பெரியவர்கள் தாங்கள் செய்வது எல்லாம் இளையவர்களின் நல்லதுக்குத்தான் எனச் சொல்லிக்கொண்டு, எல்லாவற்றிலும் மூக்கை நுழைக்க முயன்றுகொண்டு இருக்கிறார்கள்.

அதர பழைய கரியைப் பூசிக்கொண்டு, நாங்கள் அந்தக் காலத்திலேயே அப்படி என்றும் முன்னோர்கள் ஒன்றும் முட்டாள்கள் அல்ல என்றும் சொல்லிக்கொண்டிருப்பவர்களிடம், புதுமைக்கான வழி எப்படி இருக்க முடியும்?.

ஆமாம், அந்தக் காலம் நன்றாகத்தான் இருந்தது. நாம் கல்லூரியில் படிக்கும் காலத்தில் நமக்கு மொபைல் போன், வீடியோ கேம்ஸ், சோசியல் மீடியா, **peer pressure** பிரச்சினைகள் எல்லாம் இல்லை.

சரி, இவையெல்லாம் இல்லைதானே? நம்மில் எத்தனை பேரால், யூனிவர்சிட்டி ரேங்க் வாங்கி சாதனைகளைப் படைக்க முடிந்தது? சரி வேண்டாம், எத்தனை பேரால், 75 க்கும் அதிகமான மதிப்பெண்கள் வாங்க முடிந்தது?

இந்தத் தலைமுறையில் இந்த நூற்றாண்டின் இந்தப் பகுதியில், நாம் வாழ்ந்திருந்தால், நம் கையில் செல்போனும் வீட்டில் எல்லாத் தொலைத் தொடர்புக் கருவிகளும் இருந்திருந்தால், நாமும் இப்படித்தான் இருந்திருப்போம்.

தப்பு செய்ய வாய்ப்புகளே இல்லாத காலத்தில், நல்லவர்களாக இருப்பது ஒன்றும் கஷ்டமில்லை. இவ்வளவு வாய்ப்புகளை வைத்துக்கொண்டும் இளைஞர்கள், பதின் பருவத்தினர் தங்களை மேம்படுத்திக்கொண்டிருப்பதுதான் உண்மையில் சவாலான விஷயம்.

என்னுடைய குழந்தை பருவத்தில் நான் கவனித்த ஒரு விஷயம், தன்னோடு உள்ள சக மனிதர்களை ஒரு பட்டப் பெயரோடு அழைப்பது. அதிலும் அந்தப் பட்டப்பெயர் அவர்களுடைய அங்கங்களை, அங்கங்களில் உள்ள குறைபாடுகளைக் குறிப்பதாக இருக்கும்.

எடுத்துக்காட்டாக அவர்கள் கண்களைக் கூறுவது. பற்களின் வரிசை சரியில்லாததைக் குறிப்பிடுவது போன்று அடை சொற்களோடு இருக்கும். ஆனால், அந்த வகையில் இந்த இளைய தலைமுறை, அடை சொற்களின் உபயோகத்தைக் குறைத்திருப்பது மகிழ்ச்சியே!

சொல்லப் போனால், நாமும் இந்த இளைய தலைமுறை போல, ஒரு காலத்தில், மாற்றங்களை எளிதாக வரவேற்றவர்கள்தாம்.

கொஞ்சம் திரும்பிப் பாருங்கள். இளம் பருவத்திலும் சரி, குழந்தைப் பருவத்திலும் சரி, ஒவ்வொரு முறையும் புது நண்பர்கள், புதிய சூழல்கள் வரும்போது நம்மால் எளிதாக, நம்மை மாற்றிக்கொள்ள முடிந்ததுதானே?



ஆனால், இப்போது பெரியவர்கள் ஆகிவிட்டோம் என்பதால், இந்த இறுக்கமும் நான் செய்வதுதான் சரி என்ற இறுமாப்பும் ஏன்?

எனவே கணவன் மாறினால் நன்றாக இருக்குமே, மனைவி மாறினால் நன்றாக இருக்குமே எனத் தோன்றும் போது, கண்ணாடி முன்னால் நின்று, நான் எந்தெந்த விஷயங்களில் மாறினால் நன்றாக இருக்கும் எனக் கேளுங்கள்.

ஏனென்றால், இந்த வாழ்க்கையில் நீங்கள் மாற்றத்தைக் கொண்டு வர வேண்டியது உங்களிடம்தான். நீங்கள் விரும்புகின்ற மாற்றத்தை உங்களிடம்தான், கொண்டுவரவும் முடியும். அடுத்தவரை மாற்ற முயற்சி செய்வதில் நேரமும் எனர்ஜியும்தான் வீணாகும்.

அடுத்தவர் மாற வேண்டும் என்று எதிர்பார்ப்பதை விடுத்து, நம்மால் முடிந்த வரை, நல்லவற்றைச் செய்வோம். எவ்வளவு தூரம் நல்லவற்றால் இந்தப் பூமியை நிரப்ப முடியுமோ அவ்வளவு நிரப்புவோம்.

ஏனென்றால், அடுத்த தலைமுறை நன்றாக வாழ்வதற்கு ஏற்ற ஓர் இடமாக, இந்தப் பூமியை மாற்றி, இளைய தலைமுறையின் கையில் கொடுப்பதுதான் நம் கடமையாக இருக்கிறது.

நாம் மாறும் போது, நம்முடைய மாற்றம் வளர்ச்சியைத் தரும். ஏனென்றால், மாற்றமும் வளர்ச்சியும் ஒரே நாணயத்தின் இரு பக்கங்கள். ஒன்றைவிட்டு ஒன்றைப் பிரிக்க முடியாத இரு விஷயங்கள். அதுதான் மற்றவர்களும் மாறுவதற்கு, தூண்டுகோலாக அமையும்.

அப்படியென்றால், இளைய தலைமுறையை எப்படிக் கையாள்வது? அவர்களை எப்படித் திருத்துவது?

அவர்கள் உங்களைப் பார்த்து வியக்கும் வண்ணம், உங்களைப் பின்பற்றும் வண்ணம், உங்கள் ஆளுமையை வளர்த்துக்கொள்ளுங்கள். உங்களை மாற்றிக்கொள்ளுங்கள். அவ்வளவுதான். நாம் அவர்களைத் திருத்த வேண்டிய அவசியம் இல்லை.


ஒருவேளை என்னிடம் எல்லாம் சரியாகவே இருப்பது போல் தோன்றுகிறது. நான் எதை மாற்ற வேண்டும் என்ற கேள்வி எழுந்தால், வாழ்க்கையின் பல அம்சங்களில் ஏதாவது ஒன்றை எடுத்துக்கொள்ளலாம். கல்வி, உடல் நலம், பயண அனுபவங்கள் அல்லது வேலை என ஏதோ நம் மனதிற்குப் பிடித்தது.

புதிய விஷயங்களை கற்றுக்கொள்ளலாம். உடற்பயிற்சி செய்து உடலை நல்ல முறையில் வைப்பதாகட்டும் அல்லது புதிய மொழி ஒன்றைக் கற்றுக்கொள்வதாகட்டும். எதுவாக இருந்தாலும் பிடித்ததைச் செய்யலாம். சிறியதாக ஆரம்பிக்கும் மாற்றங்கள், வாழ்வில் பெரிய வளர்ச்சியைக் கொண்டுவரும்.

மாற்றத்தை நாம் ஏற்காமல், வாழ்க்கையைக் கொண்டாட்டமாக வாழ்வதும், வாழ்தலை வரமாக பார்ப்பதும் சிரமமே. எனவே, அடுத்தவர் மாற வேண்டும் என்ற எதிர்பார்ப்பை விடுத்து, மாற்றத்தை நம்மிடம் இருந்து ஆரம்பிப்போம்..

**“மாற்றம் ஒன்றே மாறாதது எனச் சொல்லிக் கொள்வது எளிதாக இருக்கிறது. ஆனால், அதை நமக்குள் செயல்படுத்துவதுதான் கஷ்டமாக இருக்கிறது.**





# தடை செய்யப்பட்ட ஏவுகணை மூலம் தாக்குதல்

இஸ்ரேலுக்கு எதிரான போரில், தடை செய்யப்பட்ட கிளஸ்டர் ஏவுகணை மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியது தெரியவந்துள்ளது.

இஸ்ரேல் - ஈரான் இடையிலான போர் 8வது நாளாக தொடர்ந்து வருகிறது. நாளுக்கு நாள் இருநாடுகளிடையே தாக்குதல் தீவிரப்படுத்தப்பட்டு வரும் நிலையில், அதிநவீன ஆயுதங்களை போரில் பயன்படுத்தி வருகின்றன.

அந்த வகையில், இந்தப் போரில் சர்ச்சைக்குள்ளான ஆயுதமான கிளஸ்டர் ஏவுகணை மூலம் இஸ்ரேல் மீது ஈரான் தாக்குதல் நடத்தியிருப்பது உலக நாடுகளிடையே அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இது குறித்து இஸ்ரேல் தரப்பில் கூறியதாவது: கிளஸ்டர் ஏவுகணை ஒருமுறை வெடித்து, அதில் இருந்து சிறிய வகை வெடிகுண்டுகள் பிரிந்து சென்று தாக்கும். அந்த வகையில், இஸ்ரேலின் அஷோர் நகரின் மீது கிளஸ்டர் ஏவுகணை மூலம் ஈரான் தாக்குதல் நடத்தியுள்ளது. சுமார் 8 கி.மீ., தொலைவுக்கு இதன் பாதிப்பு இருந்தது. இதில், எந்த உயிர்ச்சேதமும் ஏற்படவில்லை, என தெரிவித்துள்ளது.

இது குறித்து இஸ்ரேல் ராணுவ செய்தித்தொடர்பாளர் பிரிகேடியர் ஜெனரல் எபி டெப்ரின் கூறுகையில், 'பயங்கரவாத நாடு (ஈரான்) பொது மக்களை குறிவைக்கிறது. கிளஸ்டர் ஆயுதங்களைக் கூட பயன்படுத்துகிறது,' எனக் குற்றம்சாட்டினார்.

கிளஸ்டர் ஏவுகணையை ஈரான் பயன்படுத்தியதற்கு, ஆயுதக் கட்டுப்பாட்டு சங்க குழுவின் நிர்வாக இயக்குனர் டேரில் கிம்பால் எதிர்ப்பு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் கூறியதாவது

கிளஸ்டர் ஏவுகணை போன்ற ஆயுதங்கள் பெரிய அளவில் பாதிப்புகளை ஏற்படுத்தும். குறிப்பாக, பொதுமக்கள் வசிக்கும் பகுதிகளில் இந்த ஏவுகணை தாக்குதல் நடத்தினால், வெடிக்காத வெடிகுண்டுகளால் பின்விளைவுகள் மோசமாக இருக்கும், எனக் கூறினார்.

கடந்த 2008ம் ஆண்டு கிளஸ்டர் ஏவுகணைகளை பயன்படுத்த தடை விதிக்கும் ஒப்பந்தத்தில் 111 நாடுகள் கையெழுத்திட்ட நிலையில், ஈரான், இஸ்ரேல் அதனை புறக்கணித்தது குறிப்பிடத்தக்கது.

கடந்த 2023ம் ஆண்டு ரஷ்யாவுக்கு எதிரான போரில் அமெரிக்கா கொடுத்த கிளஸ்டர் ஏவுகணைகளை வைத்து உக்ரைன் தாக்குதல் நடத்தியது. பதிலுக்கு இதே ஏவுகணைகளை பயன்படுத்தி ரஷ்யாவும் தாக்குதலை நடத்தியுள்ளது. (ஐ)

# 975 பேரை தூக்கிலிட்ட ஈரான்



ஈரான் கடந்த பத்தாண்டுகளில் இல்லாத அளவுக்கு, 975 பேருக்கு கடந்த ஆண்டு மரண தண்டனை நிறைவேற்றியிருப்பதாக ஐ.நா., மனித உரிமைகள் கவுன்சிலில் தாக்கல் செய்யப்பட்ட அறிக்கையில் கூறப்பட்டுள்ளது.

மேற்காசிய நாடான ஈரானில் உலகிலேயே அதிகளவு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

இதுகுறித்து ஐ.நா., மனித உரிமைகள் கவுன்சிலில், அதன் துணை கமிஷனர் நட அல்நாஸிப் அறிக்கை தாக்கல் செய்துள்ளார்.

ஈரானில் கடந்த 2024ல் மொத்தம் 975 பேருக்கு மரண தண்டனை நிறைவேற்றப்பட்டது. தூக்கிலிடுவதன் வாயிலாக அங்கு மரண தண்டனை நிறைவேற்றப்படுகிறது.

போதைப்பொருள் கடத்தலுக்காக 507 பேர் கொலை குற்றங்களுக்காக 419 பேர் பாலியல் குற்றங்களுக்காக 20 பேர் நாட்டின் பாதுகாப்பு தொடர்பான குற்றங்களுக்காக 29 பேர் தூக்கிலிடப்பட்டுள்ளனர். இவர்களில் 31 பேர் பெண்கள். (ஐ)



# கலிபோர்னியாவில் தேசிய படைகள் குவிப்பு டிரம்ப்புக்கு நீதிமன்றம் அனுமதி

கலிபோர்னியாவில் தேசிய படைகளை குவித்த அதிபர் டிரம்ப் முடிவுக்கு அமெரிக்காவின் உச்சநீதிமன்றம் அனுமதியளித்துள்ளது.

அமெரிக்காவில் சட்டவிரோதமாக குடியேறியவர்களை, அவரவர் சொந்த நாட்டுக்கு திருப்பி அனுப்பும் நடவடிக்கைகளை அதிபர் டிரம்ப் தீவிரமாக மேற்கொண்டு வருகிறார். குறிப்பாக, அதிகளவிலான மெக்சிகோ நாட்டவர்கள் கைது செய்யப்பட்டு, நாடு கடத்தப்பட்டனர்.

இதனிடையே, டிரம்ப்பின் நடவடிக்கையை கண்டித்து கலிபோர்னியா மாகாணத்தின் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் நடந்த போராட்டத்தில் கலவரம் வெடித்தது. இதையடுத்து, மெக்சிகோ, தென் அமெரிக்க நாடுகளைச் சேர்ந்த மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர். இதையடுத்து, கலவரத்தைக் கட்டுப்படுத்த தேசிய படையைச் சேர்ந்த 4000 வீரர்களை லாஸ் ஏஞ்சல்ஸ் நகருக்கு அனுப்ப வைத்தார். இதனால், கலிபோர்னியா கவர்னர் கவின் நியூசம் - அதிபர் டிரம்ப் இடையே மோதல் ஏற்பட்டது.

டிரம்ப்பின் இந்த நடவடிக்கை பொறுப்பற்றது என்று வெளிப்படையாக விமர்சித்த கலிபோர்னியா கவர்னர் நியூசமை, கைது செய்யக் கூட உத்தரவிட நேரிடும் என்று அதிபர் டிரம்ப் எச்சரித்திருந்தார். இந்த சூழலில், அமெரிக்க அதிபர் டிரம்ப்பின் இந்த நடவடிக்கைக்கு தடை விதிக்க வேண்டும் என்று அமெரிக்காவின் மாவட்ட நீதிமன்றத்தில் கலிபோர்னியா கவர்னர் கவின் நியூசம் வழக்கு தொடர்ந்தார். இதனை விசாரித்த நீதிபதி, கலிபோர்னியா கவர்னரை கலந்தாலோசிக்காமல் அமெரிக்க அதிபர் டிரம்ப் செயல்பட்டிருப்பது சட்டவிரோதம் என்று கூறி, தேசிய படைகளை குவித்த உத்தரவுக்கு தடை விதித்து தீர்ப்பளித்தார். இந்த தீர்ப்பை எதிர்த்து உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யப்பட்டது. இந்த வழக்கை இன்று விசாரித்த நீதிபதி, லாஸ் ஏஞ்சலில் தேசிய படைகளை குவிக்கும் உத்தரவுக்கு அனுமதியளித்துள்ளார். உள்நாட்டு கலவரத்தை கட்டுப்படுத்த கூட்டாட்சி அதிகாரத்தை டிரம்ப் பயன்படுத்தியிருப்பதாக தெரிவிக்கப்பட்டது. (ஐ)

## செம்மணி.....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

பகுதியில் வீதிப் போக்குவரத்துப் பாதுகாப்புக் கடமைகளுக்கு எனப் பொலிஸார் அதிகளவில் பிரசன்னமாகியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## வலி.தென்மேற்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

2.30 மணியளவில் வலிகாமம் தெற்கு பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

28 உறுப்பினர்களைக் கொண்ட வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 8 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 6 ஆசனங்களையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி 5 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 4 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மற்றும் தமிழ் மக்கள் கூட்டணி தலா 2 ஆசனங்களையும், ஐக்கிய மக்கள் சக்தி ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இந்நிலையில், இன்று நடைபெற்ற வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பாக கந்தையா யசீதன் முன்மொழியப்பட்டார். ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் நாகராசா பசீரதன் முன்மொழியப்பட்டார்.

தவிசாளர் தெரிவுக்கான பகிரங்க வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட கந்தையா யசீதன் இலங்கைத் தமிழரசுக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, ஈ.பி.டி.பி. மற்றும் ஐக்கிய மக்கள் சக்தியின் உறுப்பினர்களின் ஆதரவுடன் 13 வாக்குகளையும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி சார்பில் போட்டியிட்ட நாகராசா பசீரதன் 9 வாக்குகளையும் பெற்றனர். 6 உறுப்பினர்கள் நடுநிலை வகித்தனர்.

இதன் மூலம் வலிகாமம் தென்மேற்கு பிரதேச சபையின் தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கந்தையா யசீதன் தெரிவானார்.

உப தவிசாளராக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் போட்டியிட்ட பேரின்பநாயகம் சுபாகர் தெரிவானார்.

## வேலணை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

வேலணை பிரதேச சபையின் தவிசாளர் மற்றும் பிரதி தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான கூட்டம் இன்று வேலணை பிரதேச சபை சபா மண்டபத்தில் வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவந்தினி பாபு தலைமையில் நடைபெற்றது.

22 உறுப்பினர்களைக் கொண்ட வேலணை பிரதேச சபைக்காக நடைபெற்று முடிந்த உள்ளூராட்சி சபைத் தேர்தலில் இலங்கைத் தமிழரசுக் கட்சி 8 ஆசனங்களையும், தேசிய மக்கள் சக்தி 4 ஆசனங்களையும், ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 3 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் 2 ஆசனங்களையும், ஐக்கிய தேசியக் கட்சி, தமிழ் மக்கள் கூட்டணி, சுயேச்சைக் குழு - 1, சுயேச்சைக் குழு - 2, சுயேச்சைக் குழு - 3 என்பன தலா ஓர் ஆசனத்தையும் கைப்பற்றியிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் சார்பில் சிவலிங்கம் அசோக்குமார் முன்மொழியப்பட்டு வழிமொழியப்பட்டார். இதன்போது சுயேச்சைக் குழு உறுப்பினர் சுவாமிநாதன் பிரகலாதன் சபையில் இருந்து வெளிநடப்புச் செய்தார்.

சபையில் தவிசாளருக்கு வேறு எந்தத் தெரிவுகளும் முன்மொழியப்படாத நிலையில் சிவலிங்கம் அசோக்குமார் தவிசாளராக அறிவிக்கப்பட்டார்.

தொடர்ந்து இடம்பெற்ற உப தவிசாளர் தெரிவில் இலங்கைத் தமிழரசுக் கட்சியைச் சேர்ந்த கணபதிப்பிள்ளை வசந்தகுமார் ஏகமனதாகத் தெரிவு செய்யப்பட்டார்.

## தமிழ்க்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

மற்றும் உப தவிசாளரைத் தெரிவு செய்வதற்கான விசேட அமர்வு இன்று காலை வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் திருமதி. தேவனந்தினி பாபு தலைமையில் பிரதேச சபையின் சபா மண்டபத்தில் இடம்பெற்றது.

13 ஆசனங்களைக் கொண்ட ஊர்காவற்றுறை பிரதேச சபையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி 4 ஆசனங்களையும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் மற்றும் தேசிய மக்கள் சக்தி ஆகியன தலா 3 ஆசனங்களையும், இலங்கைத் தமிழரசுக் கட்சி 2 ஆசனங்களையும் , ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணி ஓர் ஆசனத்தையும் பெற்றிருந்தன.

இன்றைய தவிசாளர் தெரிவின் போது இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் ஜெகதீஸ்வரன் யுகந்தனும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் அன்னலிங்கம் அன்னராசாவும் முன்மொழியப்பட்டனர்.

பகிரங்க வாக்கெடுப்பில் இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் போட்டியிட்ட ஜெகதீஸ்வரன் யுகந்தனுக்கு ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் 4 வாக்குகளும் கிடைக்க மொத்தமாக 5 வாக்குகளைப் பெற்றார்.

மேலும் அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் சார்பில் போட்டியிட்ட அன்னலிங்கம் அன்னராசாக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சியின் ஒரு வாக்கும், அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸின் 3 வாக்குகளும், ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் ஒரு வாக்குகளும் கிடைக்க மொத்தமாக 5 வாக்குகளைப் பெற்றார். தேசிய மக்கள் சக்தியின் 3 உறுப்பினர்களும் நடுநிலைமை வகித்தனர்.

தவிசாளர் தெரிவில் போட்டியிட்ட இருவருக்கும் சமமான வாக்குகள் கிடைக்கப் பெற்ற நிலையில் திருவுளச்சீட்டு முறை மூலம் தவிசாளர் தெரிவு இடம்பெற்றது. இதன்போது அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸைச் சேர்ந்த அன்னலிங்கம் அன்னராசா தவிசாளராகத் தெரிவானார்.

உப தவிசாளராக செபஸ்தியான்பிள்ளை லெனின் ரஞ்சித் தெரிவு செய்யப்பட்டார்.

இலங்கைத் தமிழரசுக் கட்சி சார்பில் தவிசாளராகப் போட்டியிட்ட ஜெகதீஸ்வரன் யுகந்தனை தமிழரசுக் கட்சின் மற்றைய உறுப்பினர் தவிசாளராக முன்மொழிய மறுத்த நிலையில் ஈ.பி.டி.பியின் உறுப்பினரே முன்மொழிந்து வழிமொழிந்தமை குறிப்பிடத்தக்கது.

## தமிழருக்கு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி...)

"தேசிய மக்கள் சக்தியின் ஆட்சிக்குத் தமிழ் மக்களும் ஆணை வழங்கியுள்ளார்கள். எமது ஜனாதிபதி மீதும், எமது அரசு மீதும் தமிழ் மக்கள் வைத்த நம்பிக்கையை நாம் வீணடிக்க மாட்டோம்.

வடக்கு, கிழக்குக்கு நாம் விஜயம் செய்யும் ஒவ்வொரு தடவையும் அரசியல் தீர்வு தொடர்பில் தமிழ் மக்களும், அவர்களின் பிரதிநிதிகளுடன் எம்முடன் பேசுவார்கள். எனவே, அவர்களின் எதிர்பார்ப்பை நாம் நிறைவேற்றியே தீருவோம்." - என்றார்.

# மேய்ச்சல் தரை வழக்கு முடிவு: 30 பேரும் விடுதலை

*மட்டக்களப்பு - மயிலத்தமடு மாதவனை மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு கோரி வீதியை மறித்து போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராக ஏறாவூர்ப் பொலிஸாரினால் தொடரப்பட்ட வழக்கு முடிவு கொண்டு வரப்பட்டது. அத்துடன் சந்தேகநபர்கள் 30 பேரையும் வழக்கிலிருந்து விடுவித்து ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் தீர்ப்பளித்துள்ளார்.*

*குறித்த வழக்கு மீதான விசாரணை ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்ற நீதிபதி மதுஜலா கேதீஸ்வரன் முன்னிலையில் வெள்ளிக்கிழமை (20) எடுத்துக்கொள்ளப்பட்டது.*

*மட்டக்களப்பு - செங்கலடி மத்திய கல்லூரிக்கு அன்று பதவியிலிருந்த முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நிகழ்வொன்றில் கலந்து கொள்ள 2023 அக்டோபர் 8ம் திகதி வந்தவேளை கொம்மாதுறை பகுதியில் - மயிலத்தமடு மாதவனை பகுதியில் ஏற்பட்டுள்ள மேய்ச்சல் தரை பிரச்சினைக்கு தீர்வு கோரி வீதியை மறித்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்கள், முன்னாள் மாகாண சபை உறுப்பினர்கள், பண்ணையாளர்கள், சிவில் சமூக செயற்பாட்டாளர்கள், காணாமல் ஆக்கப்பட்டோர் சங்க உறுப்பினர்கள் என சுமார் ஐந்நூறு பேர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.*

*இச்சம்பவம் தொடர்பாக வீதிப் போக்குவரத்துக்கு இடையூறு விளைவித்தமை, முறைகேடாக ஆட்களை தடுத்துவைத்தமை உள்ளிட்ட குற்றச்சாட்டின் பேரில் 30 பேருக்கு எதிராக ஏறாவூர்ப் பொலிஸாரினால் ஏறாவூர் சுற்றுலா நீதவான் நீதிமன்றில் வழக்கு தொடரப்பட்டது.*

*வழக்கை தொடர்ந்து கொண்டு செல்வதற்கான மேலதிக ஆதாரங்கள் வழக்கு தொடர்ந்த தரப்பிடம் இல்லாததன் காரணமாக இலங்கை தண்டனை சட்டக்கோவை 186ன் பிரகாரம் நீதவானுக்கு உள்ள அதிகாரத்தை பயன்படுத்தி வழக்கினை முடிவுறுத்தியதுடன் குற்றச்சாட்டப்பட்ட 30 பேரையும் வழக்கிலிருந்து விடுதலை செய்து தீர்ப்பளித்தார்.*

*சந்தேக நபர்கள் சார்பில் சட்டத்தரணி த.ஜெயசிங்கம், மயூரி ஜனன் ஆகியோர் ஆஜராகியிருந்தனர்*

# யாழில் போதை மாத்திரைகளுடன் 24 வயது இளைஞன் கைது!

யாழில் போதை மாத்திரைகளுடன் இளைஞர் ஒருவர் நேற்று கைது செய்யப்பட்டுள்ளார்.

மானிப்பாய், சுதுமலை பகுதியைச் சேர்ந்த 24 வயதுடைய இளைஞனே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

குறித்த கைது நடவடிக்கை யாழ் மாவட்ட குற்றத் தடுப்புப் பிரிவின் போதைப் பொருள் குற்றத் தடுப்புப் பிரிவுக்கு பொறுப்பான பொலிஸ் குழுவினரால் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்ட போது குறித்த நபரிடம் இருந்து 160 போதை மாத்திரைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபரை மேலதிக சட்ட நடவடிக்கைகளுக்காக இன்று (20) யாழ்ப்பாணம் நீதவான் நீதிமன்றத்தில் முற்படுத்துவதற்கு பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

# காலி மாநகர சபையின் அதிகாரம் தேசிய மக்கள் சக்தி வசம்!

காலி மாநகர சபையின் மேயரைத் தேர்ந்தெடுப்பதற்கான கூட்டம் இன்று (20) காலை உள்ளூராட்சி ஆணையாளர் தலைமையில் நடைபெற்றது.

காலி மாநகர சபையின் மேயரை தேர்ந்தெடுப்பதற்காக இரகசிய வாக்கெடுப்பு நடத்துவதா? அல்லது பகிரங்க வாக்கெடுப்பு நடத்துவதா? என்பதை முடிவு செய்வதற்காக நடத்தப்பட்ட வாக்கெடுப்பில், இரகசிய வாக்கெடுப்புக்கு ஆதரவாக 19 பேரும், பகிரங்க வாக்கெடுப்புக்கு ஆதரவாக 17 பேரும் வாக்களித்தனர்.

இதன்படி காலி மாநகர சபையின் மேயரை தேர்ந்தெடுப்பதற்காக பெரும்பான்மையினரின் விருப்பத்தின் அடிப்படையில் இரகசிய வாக்கெடுப்பு நடாத்துவதற்கு முடிவு செய்த போது சபையில் அமைதியின்மை ஏற்பட்டது.

இதன் பிறகு ஐக்கிய மக்கள் சக்தியின் பல உறுப்பினர்கள் சபையிலிருந்து வெளிநடப்பு செய்து புறக்கணித்த நிலையில், நிலைமையைக் கட்டுப்படுத்த பொலிஸாரும் அழைக்கப்பட்டனர்.

இதனால் சபை 30 நிமிடங்களுக்கு ஒத்திவைக்கப்பட்டது.

பின்னர் நடாத்தப்பட்ட இரகசிய வாக்கெடுப்பில், தேசிய மக்கள் சக்தி கட்சியின் சுனில் கமகே 19 வாக்குகளைப் பெற்று காலி மாநகர சபையின் மேயராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார்.

பிரதி மேயராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பிரியந்த சகபந்து தெரிவு செய்யப்பட்டார்.

# காலி மாநகர சபை பிரதி மேயர் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன கட்சியிலிருந்து இடைநிறுத்தம்!

*காலி மாநகர சபையின் பிரதி மேயராக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவிலிருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட பிரியந்த கொடகம சஹபந்துவின் கட்சி உறுப்புரிமை இடைநிறுத்தப்பட்டுள்ளதாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பொதுச் செயலாளர் சட்டத்தரணி சாகர காரியவசம் அறிக்கை ஒன்றை வெளியிட்டு தெரிவித்துள்ளார்.*

*காலி மாநகர சபையின் மேயர் மற்றும் பிரதி மேயர் தேர்தலின் போது பின்பற்ற வேண்டிய நடைமுறை குறித்து கட்சி அறிவித்திருந்தது.*

*எனினும் வாக்களிப்பின் போது கட்சியின் அறிவுறுத்தல்களுக்கு மாறாக செயற்பட்டதாகவும், அதன் விளைவாக பிரதி மேயராக பிரியந்த கொடகம தேர்ந்தெடுக்கப்பட்டதாகவும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*

*இதனால் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கட்சி உறுப்புரிமையிலிருந்து அவர் இடைநிறுத்தப்படுவதாகவும், கட்சியில் வகிக்கும் அனைத்து பதவிகள் மற்றும் பொறுப்புகளுக்கான உரிமையும் இழக்கப்படுவதாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் அறிவிக்கப்பட்டுள்ளது.*

*மேலும் அவருக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் அந்த அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.*







இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல - 08, Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 20.06.2025 வெளியிடப்பெற்றது.